1972 பிப்ரவரி 1]

திரு. சு. துரைசாமி : நம்முடைய தமிழகத்தில் பஞ்சுப் பற்றுக் குறை இருக்கிறது. அதைப் போக்கக்கூடிய முறையில் பருத்தி உற்பத்திக்கு 25 சதவிகிதம், 33-1[3 சதவிகிதம் என்ற முறையில் மானியம் அளிக்கப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். பூச்சி கொல்லி மருந்துகளை வாங்குகின்ற நேரத்தில் விவசாயி களுக்கு மிச்சம் இருக்கும் பணத்தைக் கடனுகக் கொடுக்க அரசாங் கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விவசாயத்தைப் பெருக் குவதுதான் வேளாண்மைத் துறையின் கடமை. கடன் கொடுப் பதைப் பற்றிக் கூட்டுறவு அமைச்சரைக் கேட்க வேண்டும்.

சென்னையில் காய்கறி பயிரிட சிறப்புத் திட்டம்.

* 250 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆடி மாதத்தில் சென்னை நகரில் காய்கறி பயிரிட சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : இப்போது காய்கறிகளின் விலைகூட அதிக மாக ஏறிக் கொண்டே போகிறது. சென்னை நகரில் ஆடி மாதத்தில் நல்ல சீசனுக இருக்கும் நேரத்தில் பங்களாக்களில் தற்போது மலர்ச் செடிகளை வளர்ப்பதைக் குறைத்துக் கொண்டு காய்கறிகளை பயிரிட வேண்டுமென்பதற்காக ஒரு தீவிர திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : காய்கறி பயிரிட ஆடி மாதத்திற்கு என்று எந்தவித சிறப்புத் திட்டமும் கிடையாது. சென்னை நகரில் வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் பயிரிட ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனல் சர்க்கார் போட்ட திட்டம் சரிவர இயங்கவில்லை என்ற காரணத்தால் நிறுத்தப்பட் டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர்களுடைய பங்களாக் களில் அதிகமான காலி இடங்கள் இருக்கின்றன. அங்கே காய்கறி பயிர் செய்து நியாய விலைக் கடைகளில் விற்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அமைச்சர்கள் இருக்கும் இடங்களில் காய்கறிகள் மாத்திரமல்ல, எல்லாப் பயிர் களுமே பயிரிடப்படுகிறது. அங்கு அடிக்கடி பல அங்கத்தினர் களும் மற்றவர்களும் வருகிற காரணத்தால் என்ன செய்திருக் கிறோம் என்பதைப் பார்க்க வசதியாக இருக்கும் என்ற

காரணத்தால் பயிரிடப்படுகிறது. வேளாண்மைத் துறை அமைச்சர் என்ற முறையில் என்னுடைய இடத்தில் கூட கேழ்வரகு நட்டிருக்கிறது; சோளம் போடப்பட்டிருக்கிறது. பருப்பு வகைகள் போடவும் பரீட்சார்த்தமாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அங்கத்தினர் விரும்பினால் அதைப் பார்த்து தங்களுடைய இல்லங்களிலும் அந்த முறையைக் கையாளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களுடைய கேள்வி, அங்கத்தினர்களுக்குக் கொஞ்சம் கொடுப்பார்களா என்பது.

திருமதி த. ந. அனந்தநாயகி: அமைச்சர்கள் வீட்டில் கேழ்வரகு போட வேண்டிய அவசியம் கிடையாது. சென்னை நகரத்தில் வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவை எக்கச்சக்க மாக விலை விற்கின்றன என்பது அமைச்சர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆகவே, காய்கறிகளை அமைச்சர்கள் இல்லங்களில் போட்டு நியாய விலையில் விற்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அமைச்சர்கள் இருக்கும் பகுதி எப்படிப்பட்ட பகுதி என்பது கனம் அங்கத் தினர்களுக்குத் தெரியும். உப்புத் தண்ணீர் நிறைந்த பகுதி. அங்கு கேழ்வரகுதான் வருமே தவிர, மற்ற காய்கறிகள் வராது.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, is the Government aware that there is steady increase in the prices of vegetables in Madras City and what action the Government is proposing to take to bring down the prices?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது குளிர் பதனிடும் நிறுவனம் ஒன்று ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. விரைவில் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றன. அது முடிந்தவுடன் ஊட்டியில் இருந்தும், மற்றப் பகுதிகளில் இருந்தும் காய்கறிகளைக் கொண்டு வந்து வைத்து விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போது காய்கறிகள் சூப்பர் அங்காடியில் மட்டுந்தான் நியாய விலையில் விற்கப்படுகிறது. அங்கு போய் வாங்கி வரவேண்டுமென்றால் போய் வரச் செலவு காய்கறி விலையைப் போல் இரண்டு மடங்கு ஆகிவிடுகிறது. ஆகவே, காய் கறிகளை எல்லா கோவாப்பரேட்டிவ் சொசைடிகள் மூலமாகவும் நியாய விலையில் விற்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அந்தக் காய்கறிகள் வந்தவுடன் அதுபற்றிக் கவனிக்கப்படும்.